ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2008/6 - 2017 පෙබරවාරි මස 27 වැනි සඳුදා - 2017.02.27
2008/6 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதி திங்கட்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்
### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இலக்கம்: மடு/இ/03/354.

காணி அமைச்சின் இலக்கம்: 4/3/9/2015/டப் எஸ்/106.

மொனராகலை, மடுல்ல நிர்ப்பாசனத் திட்டத்தின் களஞ்சிய தாங்கி அமைப்பதற்கு அவசியமான கீழ் குறிப்பிடப் பட்டுள்ள காணியை எடுத்துக் கொள்வதற்கு அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தல் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

ஊவ மாகாணத்தின், மொனராகலை மாவட்டத்தில், மடுல்ல பிரதேச செயலகப் பிரிவில் ஒப்பேகொட கிராமத்தில் அமைந்துள்ள மொனராகலை நில அளவை யாளரினால் ஒழுங்குபடுத்தப்பட்ட இ.கி.த. இல. 594, மேலதிக இலக்கம் 23, பத்திர இல. 23 இல் காட்டப் பட்டுள்ள காணி.

**அட்டவணை**

**1. துண்டு இலக்கம் 1092**

காணியின் பெயர்: மஹலிந்தே வத்த; உரிமை கோருவோர்: அரசாங்கம்; ஆரம்ப உரிமை கோருவோர்: விஜயலத் பேலிகே பத்மா, எம். ஓ. எச். வீதி, சிறிவிஜித்தபுர, மொனராகலை; விஸ்தீரணம்: 0.1012 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு, மடுல்ல பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என்னை சந்திக்க வேண்டும்.

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணித் துண்டை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங் களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக் கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள் ளப்படுகின்றனர்.

ஆர். எம். ஆர். எஸ். திலகரத்ன,
பிரதேச செயலாளர்,
மடுல்ல.

பிரதேச செயலகம்,
மடுல்ல,
2017, பெப்புருவரி 22.

3 - 457

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது குறிப்பிலக்கம்: அநு/17/5/3/9/5.

காணி அமைச்சின் குறிப்பிலக்கம்: 4/3/9/2011/WS/322.

பொது மக்களின் தேவைக்காக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள காணியை எடுத்துக் கொள்வதற்கு அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வடமத்திய மாகாணத்தில், அநுராதபுர மாவட்டத்தில், இபலோகம பிரதேச செயலாளர் பிரிவில், வடக்கு கலாகம கோரளையின் சிறு பிரிவில், விஜிதபுர கிராமத்திலமைந்த, நில அளவை மா அதிபரால் அளந்து, 2011.08.26 ஆம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட இறுதிக் கிராம வரைபட இல. 850, மேலதிக இல. 8, படிவ இல. 10 ஐ கொண்ட வரைபடத்தின் காணித்துண்டிலக்கம் 244 எனக் குறிப்பிட்டபட்டுள்ள "விஜிதபுர லந்த" என்னும் காணியில் சுமார் 0.0043 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ்காணும் எல்லைகளில் அமைந்துள்ள காணித்துண்டு.

**1. துண்டு இலக்கம் 244 — காணியின் பெயர்: விஜிதபுரலந்த; விஸ்தீரணம்: 0.0043 ஹெக்டயார்.**

வடக்கு: 243, 248 ஆம் இலக்கம் கொண்ட காணித் துண்டுகள்; கிழக்கு: 248 ஆம் இலக்கம் கொண்ட காணித்துண்டு; தெற்கு: 247, 246 ஆம் இலக்கம் கொண்ட காணித்துண்டுகள்; மேற்கு: 246, 245, 243 ஆம் இலக்கம் கொணட காணித்துண்டுகள்.

உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும்: திரு. நாகூர் பிச்சை மொஹொமட் நிசார், பொல்வத்த, விஜிதபுர.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு, இபலோகம பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என்னை சந்திக்க வேண்டும்.

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணித் துண்டுகளை எடுத்ததற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எம். எச். எச். சாஜிதா பானு,
பிரதேச செயலாளர்,
இபலோகம.

பிரதேச செயலகம்,
இபலோகம,
2017, பெப்புருவரி 16.

3 - 458